**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண்.110/2022 c/w அசல் வழக்கு எண்.92/2022**

2026–ஆம் ஆண்டு மார்ச் மாதம் 10–ம் நாள் செவ்வாய்க்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| தேதி: | 10.03.2026 | | |
|---|---|---|---|
| பெயர்: | ரம்யா<br>(PW–2 Chief ) | தகப்பனார் பெயர்: | ரங்கநாதன் |
| கிராமம்: | சீர்காழி டவுன் | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | தனியார் பணி | வயது : | 32/2026 |

**முதல் விசாரணை : 10.03.2026**

நான் அசல் வழக்கு எண்.110/2022–ல் வாதியின் மகள். அசல் வழக்கு எண்.92/2022–ல் 2ம் பிரதிவாதியின் மகள் ஆவேன். எனக்கு வழக்கு விபரம் தெரியும். என்னுடைய சாட்சியத்தை நிரூபண பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அந்த நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். அந்த நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். வழக்கிற்கு ஆதரவாக கீழ்காணும் ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

1. எனது தகப்பனார் வழக்கு நடத்த எனக்கு கொடுத்த சிறப்பு அதிகார பத்திரம் **வா.சா.ஆ.1** ஆகவும்,

2. கடந்த 09.03.2022 ல் தாவா சொத்தை பொறுத்து தருமபுரம் ஆதீனம் சார்பில் வழங்கப்பட்ட அனுமதி சான்றின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.2** ஆகவும்,

3. கடந்த 19.03.2022 ல் தமிழ்நாடு மின்சார வாரியம் சார்பில் வழங்கப்பட்ட பெயர் மாற்ற உத்தரவின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.3** ஆகவும்,

4. கடந்த 12.07.2021 ல் எனது தகப்பனார் தருமபுரம் ஆதீனத்திற்கு

செலுத்திய பகுதி ரசீது சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.4** ஆகவும்,

5. மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் HCP. No.439/2022 ன் status report சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.5** ஆகவும்,

**<u>3 மற்றும் 5ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. எங்களுக்கும், 1ம் பிரதிவாதிக்கும் பிரச்சனை ஏற்பட்டு காவல் நிலையத்தில் விசாரணை நிலுவையில் இருந்தது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி காணவில்லை என அவரது மாமனார் சென்னை உயர்நீதிமன்றத்தில் ஆட்கொணர்விக்கும் நீதி பேராணை மனு தாக்கல் செய்திருந்த விவரம் தெரியுமா என்றால் தெரியும். 1ம் பிரதிவாதி கண்டுபிடிக்கப்பட்டு 3ம் பிரதிவாதியால் சீர்காழி நடுவர் நீதிமன்றத்தில் ஆஜர்பத்தப்பட்ட விவரம் தெரியுமா என்றால் தெரியும். மாண்புமிகு உயர்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை 3ம் பிரதிவாதிகள் நிறைவேற்றியுள்ளார்கள் என்றால் சரியல்ல.

2. 1ம் பிரதிவாதி காணாமல் போன சமயத்தில் 3ம் பிரதிவாதியால் விசாரணைக்காக தாவா சொத்தில் கிராம நிர்வாக அலுவலர் உதவியுடனும் புகைப்பட கலையளுருடனும் பூட்டை உடைத்து சோதனை நடத்தப்பட்டது என்றால் சரிதான். பின்னிட்டு ஏற்படும் பிரச்சனைகளை தவிர்க்கும் பொருட்டு தான் 3ம் பிரதிவாதியால் தாவா சொத்தில் வீடு பூட்டப்பட்டது என்றால் சரியல்ல. தாவா சொத்து நாளது தேதி வரை பூட்டி தான் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்திற்கு 1ம் பிரதிவாதியிடமிருந்து குத்தகை உரிமை மாற்றி பெற்றுள்ளோம் என்றால் சரிதான். தற்போதும் 3, 5 பிரதிவாதிகள் நீதிமன்ற உத்தரவை பின்பற்ற தயாராக உள்ளார்கள் என்றால் சரியல்ல.

3. தாவா சொத்திற்கு 3, 5 பிரதிவாதிகள் தரப்பில் எவ்வித உரிமையும் கொண்டாடப்படவில்லை என்றால் சரிதான். சட்டம் மற்றும் ஒழுங்கு பிரச்சனையை தவிர்ப்பதற்காக 3ம் பிரதிவாதியால் எடுக்கப்பட்ட சட்டப்படியான நடவடிக்கைகளுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 3ம் பிரதிவாதியிடம் கொடுக்கப்பட்ட மனு சம்பந்தமாக நீதிமன்றம் மூலம் பரிகாரம் தேடிக்கொள்ள அறிவுறுத்தப்பட்டது

என்றும், அதைமறைத்து இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி தற்போது எங்குள்ளார் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. தாவா தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

<u>4 மற்றும் 6 ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. வட்டாட்சியரிடம் எனது தகப்பனார் கொடுத்த மனுவின் மீது வட்டாட்சியரால் அமைதி பேச்சுவார்த்தைக்கு கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்ட விபரம் தெரியுமா என்றால் தெரியும். அமைதி பேச்சுவார்த்தை கூட்டத்திற்கு எங்கள் தரப்பில் ஆஜரானோம். பிரதிவாதிகள் தரப்பில் ஆஜராகவில்லை என்றால் சரிதான். இரு தரப்பிலும் ஆஜராகவில்லை என்பதால் வட்டாட்சியரால் எவ்வித முடிவும் எட்டப்படவில்லை என்றும், நீதிமன்றம் மூலமாக பரிகாரம் தேடிக்கொள்ள அறிவுறுத்தப்பட்டார் என்றாலும் சரியல்ல.

2. நாங்கள் கொடுத்த மனுவின் மீது முறைப்படி நடவடிக்கை எடுக்க 04ம் பிரதிவாதி மீதும், அவரது உயரதிகாரி மீதும் தாக்கல் செய்துள்ள இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 4ம் பிரதிவாதி தன்னுடைய அதிகார வரம்பிற்குட்பட்டுதான் செயல்பட்டு உள்ளார் என்றால் சரியல்ல.

**7ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.**

**1, 2 பிரதிவாதிகள் ஏற்கனவே தோன்றாத்தரப்பினர் ஆக்கப்பட்டுள்ளனர்.**